# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2270/62 - 2022 මාර්තු මස 10 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.03.10

*2270/62 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 10 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 3/2/1/140.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/8/2018/PC/468.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், மினுவங்கொடை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 107, கணிஹிமுல்ல கிராம அலுவலர் பிரிவில், கணிஹிமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை நாயகத்திற்கு பதிலாக கம்பஹா சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட 2021.12.28 ஆந் திகதிய ஆரம்ப வரைபட இல. கம் 4278 இல் துண்டு இல. 01 எனக் காட்டப்பட்ட 0.1624 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட பின்வரும் காணித்துண்டின் விபரம் பின்வருமாறு:

*01.* **துண்டு இல. 01**

காணியின் பெயர்: பரகஹவத்தை; காணியின் விபரம்: வீட்டுத்தோட்டம், சுமார் 20-40 வருடம் பழமையான தென்னை மரங்கள் 16 காணப்படுகின்றன; உரிமை கோருவோர்: தெவல பொல, வட்டினாபஹுவத்தையில் வசிக்கும் எஸ். பி. ஏ. அருணசிறி சமரகோன்; விஸ்தீரணம்: 0.1624 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு மினுவங்கொடை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

யூ. டபிள்யூ. ரீ. யூ. ராஜகருணா,
பிரதேச செயலாளர்,
மினுவங்கொடை.

பிரதேச செயலகம்,
மினுவங்கொடை.
2022, மாச்சு 03

EOG 03 - 0837